# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 30 வெள்ளிக்கிழமை (15-09-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 295


# குண்டு வெடிப்பினாலேயே 'அன்ரனோவ்' வீழ்ந்தது!

## மண்டைதீவு ஷெல்லுக்கு மாணவி காயம்

யாழ்ப்பாணம், செப். 15

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 6 மணிக்கு யாழ். கரையோரப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது குருநகரில் மாணவி ஒருவர் படுகாயமடைந்தார். வீட்டின்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஸ்ரீலங்கா விமானப் படையின் முன்னாள் தளபதி கூறுகிறார்

கொழும்பு, செப்ரெம்பர் 15

ஸ்ரீலங்கா விமானப்படையின் "அன்ரனோவ்" விமானம் வெடித்துச் சிதறி கடலில் வீழ்ந்ததற்கு குண்டு வெடிப்பே காரணமாக இருக்க வேண்டும் என ஸ்ரீலங்கா விமானப் படையின் முன்னாள் தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக தெரிவித்திருக்கின்றார்.

காலநிலை சீரின்மையும், தொழில் நுட்பக் கோளாறுமே விமானம் வீழ்ந்ததற்குக் காரணம் என ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் கூறப்படும் கருத்தை அவர் முற்றாக நிராகரித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பு ஜா-எல கடற்பிரதேசத்தில் — கடற்கரையிலிருந்து சுமார் இருபத்தைந்து மைல் தூரத்தில் அப்பால், ஸ்ரீலங்கா விமானப்படையின் அன்ரனோவ் விமானம் 75 துருப்புகளுடன் கடலுக்குள் வீழ்ந்தது தெரிந்ததே.

இது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே விமானப் படையில் 30 வருடசேவை யாற்றியவரான முன்னாள் விமானப்படைத் தளபதி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பலாலி முகாம் படையினர் நேற்றும் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 15

பலாலி முகாம் படையினர் நேற்றும் சுற்றுப்புறக் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

அதிகமான ஷெல்கள் வலிகாமம் மேற்குப் பகுதிகளை நோக்கியே ஏவப்பட்டன. கட்டுடை, சண்டிலிப்பாய், சங்குவேலிப் பகுதிகளில் அதிகளவு ஷெல்கள் விழுந்து வெடித்தன.

நீர்வேலிப் பகுதியில் வீடொன்றின் மலசலகூடத்தின் மீது விழுந்து வெடித்த ஷெல்லினால் மலசலகூடம் முற்றாகச் சேதமடைந்தது. வீடும் சிறு சேதத்திற்குள்ளானது. வீட்டில் இருந்தவர்களும், வீதியால் சென்றவர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கைக்கு 'கைகுலுக்கல்-2' என நாமம்

கொழும்பு, செப். 15

கடந்த மூன்று நாட்களாக ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு 'ஷேக் ஹாண்ட் — II' (Shake — Hand — II) (கைகுலுக்கல் — இரண்டு) எனப்பெயரிடப்பட்டுள்ளதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

இந்நடவடிக்கையினால் படையினர் கைப்பற்றியுள்ள பிரதேசங்கள் மூலம் — பலாலி விமான இறங்குதுறை விடுதலைப் புலிகளின் மோட்டார் ஷெல் தாக்குதல் பிரதேசத்துக்கு — அப்பாற்பட்ட இடமாக — அத்தகைய தாக்குதல்களில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசமாக பேணப்பட்டிருக்கின்றது என்றும் கொழும்பில் அறிவிக்கப்பட்டது. (உ-3-6)

## தியாகி திலீபன் எட்டாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 15

தியாகி திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் இன்று உணர்வுபூர்வமாக ஆரம்பமாகின்றன.

உண்ணாவிரதம் நினைவுரைகள், சிரமதானம் ஆகியன வட்ட, கோட்ட மட்டங்களில் நடைபெறவுள்ளன.

நினைவு நிகழ்வுகளை உணர்வுபூர்வமாகவும், அடக்கமாகவும் நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறையினரும், கடற்புலிகளின் மாவீரர் பணிமனையினரும் நினைவு நிகழ்வுகளுக்கான பரந்த அளவிலான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

அடையாள உண்ணாவிர

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 'லங்கா முடித' கப்பலில் நிவாரணப் பொருள்கள்

### அடுத்த வாரமளவில் வந்துசேரும்

யாழ்ப்பாணம், செப். 15

கொழும்பில் தற்சமயம் குடாநாட்டு மக்களுக்கான நிவாரணப் பொருள்களை ஏற்றிக் கொண்டிருக்கும் "லங்கா முடித" கப்பல் அடுத்த வாரமளவில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடாநாட்டுக்கென ஏற்றி வரப்பட்ட பொருள்களில் ஒரு பகுதியை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அனுமதியின்றி, கைவந்தமாக படையினரால் காங்கேசன்துறையில் இறக்கப்பட்டதை அடுத்து — தடைப்பட்டிருந்த இக்கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பித்து அதில் குடாநாட்டுக்கான பொருள்களை ஏற்றி அனுப்ச் செய்யும் முயற்சியில் தற்போது இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரியவந்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை உயர் அதிகாரி யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், செப். 15

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் ஜெனிவா தலைமையகத்தில் ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரியான திரு. மக்ஸ் ஹார்டோன் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

இக்குதமது அமைப்பின் செயற்பாடுகள் குறித்து அவர் பலதரப்பட்டவர்களுடன் பேச்சு நடத்துவார்.

"ஹரணி" கப்பலில் பருத்தித்துறை ஊடாக வரும் அவர் இங்கு இருதினங்கள் தங்கியிருப்பார்.

இக்கப்பலில் சர்வதேச தொண்டர் அமைப்புக்களைச் சேர்ந்த 20 அதிகாரிகளும் வருகின்றனர். (ஒ-3)

## விமானி பாக்கியநாதன் குறித்து தெற்கில் வதந்தி

கொழும்பு, செப். 15

நேற்றுமுன்தினம் வீழ்ந்த அன்ரனோவ் விமானத்தின் விமானியான பாக்கியநாதனே தற்கொலைத் தாக்குதல் நபராகச் செயற்பட்டு விமானத்தை கடலில் வீழ்த்தினார் என தெற்கில் பரவலாக வதந்தி அடிபடுவதாக 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது.

விமானி பாக்கியநாதனே மேற்படி விமானத்தை முதன் முதல் உக்ரேன் நாட்டில் இருந்து கொழும்புக்குச் செலுத்தி வந்தார் என்றும் இவர் தேர்ச்சி மிக்க விமானி என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## விமானம் வீழ்ந்த கடலில் தொடர்ந்து தேடுதல்!

### சிதைந்த சடலம் பகுதி மீட்பு

கொழும்பு, செப். 15

"அன்ரனோவ்" விமானம் நேற்று முன்தினம் கடலில் வீழ்ந்த பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படை கழியோடிகளும் விமானப்படையினரும் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

விமானம் வீழ்ந்த சம்பவத்தில் உயிரிழந்த ஒருவரின் — சிதைந்த சடலப் பகுதி ஒன்றை தேடுதலில் ஈடுபட்டுள்ளோர் மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சடலத்தின் பகுதியை இனம் காணமுடியாதிருப்பதா

(5 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூர் விமான சேவைகள் நிறுத்தப்பட்டதாக அறிவிப்பு

கொழும்பு, செப். 15

விடுதலைப்புலிகள் நாடாளுமன்றத்தை வெடிகுண்டு வைத்து தகர்க்கத் திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்தியை அடுத்து உள்நாட்டு விமானப் போக்குவரத்து சேவைகள் அனைத்தும் கடந்த புதன்கிழமை முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தனியார் விமானம் ஒன்றை பயன்படுத்தி அல்லது விமானம் ஒன்றைக் கடத்தி விடுதலைப்புலிப் போராளிகள் தலைநகரில் உள்ள இலக்கைத் தாக்குவார்கள் என்று — கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிப் போராளி எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் தகவல் வெளியிட்டிருப்பதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்கொலைத் தாக்குதல்களை நடத்த சிறிய விமானங்கள் இவற்றை விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்துள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அச்சம் கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-3-6)


நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கான பெரும்புரட்சிக்கு தயாராக வேண்டும்.

— தியாகி திலீபன்

(சி.2270)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு நாளை கைலாசபதி கலை அரங்கில்

பக்கம் - 2

## இம்முறை 1,068 பேருக்கு பட்டமளிப்பு

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். பல்கலைக்கழகத்தின் 15ஆவது பட்டமளிப்பு விழா நாளை சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தலைமையில் கைலாசபதி கலை அரங்கில் மூன்று அமர்வுகளாக நடைபெறும்.

இம்முறை ஆயிரத்து 68 பேருக்கு பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

மூன்று அமர்வுகளின் போதும் மாணவர், உத்தியோகத்தர், ஆசிரியர், வேந்தர், துணைவேந்தர் ஆகியோரின் அணிவகுப்பு ஊர்வலம் இடம்பெறும்.

முதலாவது அமர்வு காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இவ் அமர்வின்போது முன்னாள் மருத்துவபீடாதிபதி பேராசிரியர் செல்லையா சிவஞானசுந்தரம் அவர்களுக்கு விஞ்ஞான கலாநிதி என்னும் கௌரவப்பட்டம் வழங்கப்படும். தொடர்ந்து 215 பேருக்கு நேரில் பட்டங்கள் வழங்கப்படும்.

கல்வியல் பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ் 91 பேருக்கும்—

ஆங்கில மொழி கற்பித்தலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் 8 பேருக்கும்—

வர்த்தகமாணி 80 பேருக்கும்—

இசைக்கலைமாணி நாட்டியக் கலைமாணி 42 பேருக்கும் வழங்கப்படும்.

இதைவிட எஞ்சிய 66 பேருக்கும் பின்னர் சான்றிதழ் வழங்கப்படும்.

இரண்டாவது அமர்வு காலை 11 மணிக்கு ஆரம்பமாகும்.

இவ் அமர்வின்போது 255 பேருக்கு நேரில் பட்டங்கள் வழங்கப்படும்.

இதில் பொதுநிர்வாகத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் 7 பேருக்கும் —

மருத்துவமாணி, சத்திர சிகிச்சைமாணி விஞ்ஞானமாணி 157 பேருக்கும்— தொழில் நிர்வாகமாணி 48 பேருக்கும்— சித்த மருத்துவமாணி, சத்திரசிகிச்சைமாணி 15 பேருக்கும் வழங்கப்படும். இதைவிட எஞ்சிய 69 பேருக்கு பின் சான்றிதழ் வழங்கப்படும்.

மூன்றாவது அமர்வு பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். இதன்போது காலம் சென்ற யாழ். பல்கலைக்கழக விவசாயத்துறை முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சோமசுந்தரம் கந்தையா அவர்களுக்கு விஞ்ஞான கலாநிதி என்னும் கௌரவப்பட்டம் தேகாந்த நிலையில் வழங்கப்படும்.

இந்த அமர்வின் போது 209 பேருக்கு நேரில் பட்டங்கள் வழங்கப்படும்.

இதில் விவசாயத்தில் விஞ்ஞானமாணி 19 பேருக்கும்— கலைமாணி 190 பேருக்கும் வழங்கப்படும்.

இதைவிட விஞ்ஞான கலாநிதி, முதுகலைமாணி உட்பட 253 பேருக்கு பின் சான்றிதழ் வழங்கப்படும்.

மூன்று அமர்வுகளின் போதும் 63 பரிசில்களும் புலமைப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக நேற்று காலை பட்டமளிப்பு விழா தொடர்பாக பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

(இ-4)

# கலைஞர் கௌரவிப்பும் கலை நிகழ்வும்

இடம்: காந்தி சனசமூக நிலைய வெள்ளி விழா அரங்கு, அரியாலை மேற்கு

காலம்: நாளை 1995 – 09 – 16 சனி இரவு 7 – 00 மணி

## ★ நிகழ்வுகள் ★

★ கலை இலக்கியப் பேரவையின் புரட்டாதி மாத இதழ் "உதயம்" சஞ்சிகை வெளியீடு

★ வெளியீடும் விமர்சனமும்;
திரு. செ. வெற்றாஸ்மயில் அவர்கள்
(நிர்வாக அதிகாரி, வேலணைக் கோட்டம்)

★ செல்விகள்: பிறேமலதா பொன்னுத்துரை, வி ஜயமாலா சோமசுந்தரம் ஆகியோர் இணைந்து வழங்கும்
"இன்னிசைக்கச்சேரி"

★ கலைஞர் கௌரவிப்பும் பட்டமளிப்பும்:
இசை அமைப்பாளர், ஆர்மோனியக் கலைஞர், ஓய்வு ஆசிரியர்
திரு. செ. பொன்னுத்துரை அவர்களுக்கு

★ தலைமை: திரு. மா. கனகநாதன் அவர்கள்
(உபதலைவர் க. இ. பேரவை)

★ மங்கள விளக்கேற்றல்:
திரு. திருமதி. கா. சிவபாக்கியம் தம்பதியினர்
(பொருளாளர் க. இ. பேரவை)

★ வரவேற்புரை:
திரு. வே. சிவகுமாரன் அவர்கள்
(செயலாளர், க. இ. பேரவை)

★ பாராட்டுரை:
அருட்கவி நாக பரமசாமி அவர்கள்
(அதிபர், யாழ். ஆனந்தா ம. க. பாடசாலை)

★ 'ஆர்மோனிய இசை அரசு' பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்துக் கௌரவித்தலும், பாராட்டுரை வழங்கலும்:
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

★ வாழ்த்துப்பா இசைத்தல்:
அருட்கவி நாகபரமசாமி அவர்கள்

★ வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவித்தலும், வாழ்த்துரையும்:
புதுவை இரத்தினதுரை அவர்கள்
(பொறுப்பாளர், கலை பண்பாட்டுக்கழகம்)

★ வாழ்த்துரைகள்:
1. பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள்
(தலைவர், சமஸ்கிருதத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
2. திரு. வெற்றாஸ்மயில் அவர்கள்
(நிர்வாக அதிகாரி வேலணைக்கோட்டம்)
3. திரு. ஐ. செல்வராசா அவர்கள்
4. திரு. செ. கந்தையன் அவர்கள்
(தலைவர் கா. ச. ச. நிலையம்)
5. திரு. இ. ஜீலேந்திரன் அவர்கள்
6. திரு. அ. தெய்வேந்திரன் அவர்கள்
7. திரு. ம. வித்தியானந்ததேசன் அவர்கள்
(நிர்வாக உறுப்பினர் க. இ. பேரவை)

★ பதிலுரை,
திரு. செ. பொன்னுத்துரை அவர்கள்
(இசையமைப்பாளர்)

★ நன்றியுரை,
திரு. கா. பஞ்சரத்தினம் அவர்கள்
(நிர்வாக உறுப்பினர், க. இ. பேரவை)

கொண்டாவில் ஊரைச் சேர்ந்த
திரு. அ. கருணானந்தராசா அவர்களின்
ஆதரவில்
அல்வாய் மனோகர கான சபாவினர்
வழங்கும்
"பூதத்தம்பி" வரலாற்று இசை நாடகம்

கலை இலக்கிய பேரவை,
காந்தி சனசமூக நிலையம்,
யாழ்ப்பாணம்.


பாராட்டுப்பெறும் கலைஞரை
மனமார வாழ்த்துவது:

**ச, லிங்கநாதன் வண்ணச்சோலை**

(வி எஸ், லிங்கநாதன் அன்கோ)

இல, 13, 14, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(88588)





## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

மருத்துவபீடம் -
கல்வியாண்டு
1995 / 96

1995 / 96 ஆம் கல்வியாண்டு 1995 – 10 – 0[illegible] திங்கட்கிழமை புதிய மாணவர்கள் உட்பட எல்லா மருத்துவ மாணவர்களுக்கும் ஆரம்பமாகும்.

பதிவாளர்

(சி/8269)


## ஷெல்லை குத்தியவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 15

வெடிக்காத நிலையில் இருந்த ஷெல் ஒன்றை வெறும் காணி ஒன்றினுள் கண்டெடுத்த சிறுவன் அதனை நிலத்தில் குத்திப்பார்த்தபோது அது வெடித்ததில் படுகாயமடைந்தான்.

உரும்பிராயில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் தேவதாஸ் டெனிஸ் (வயது15) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஈ-13-15)

## இறந்தவர் அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம், செப். 15

புன்னாலைக் கட்டுவன் பகுதியில் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற ஷெல் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமான வயோதிபரின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் தம்பிராசா (78 வயது) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இவருடன் ஷெல் தாக்குதலில் அன்றைய தினம் இறந்தோரின் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளது. (ஒ-15-13)

## மீசாலை விக்னேஸ்வரா மாணவருக்கு

தென்மராட்சி, செப். 15

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு செய்முறைப் பரீட்சைகள் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

மீசாலை விக்னேஸ்வரா ம. வியில் இடம்பெயர்ந்து மக்கள் தங்கியுள்ளதால் இந்தப் பாடசாலை மாணவர்கள் வீரசிங்கம் ம. வியில் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-117)

## சிறப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 15

உடுவில், சுன்னாகம், சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டம் நாளை 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவிட்டபுரம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வருவாய்ப் பகுதியினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக் கூட்டத்துக்கு வரி செலுத்துவோர் தவறாது வருகை தந்து தத்தமது ஆவணங்களுடன் குறித்த நேரத்தில் சமுகம் தருமாறு கோரப்பட்டுள்ளது.

(உ)


**SPOKEN ENGLISH**

With Grammar

By

**BRITTO**

புதிய பிரிவு
ஆரம்பம் 15-9-95
வெள்ளிக்கிழமை
இன்று 3. 30 P. M

எஸ். ரி.
கல்வி நிறுவனம்

46 (105),
2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(38545)



பட்டம் பெறும் மாணவர்களுக்கு
எமது வாழ்த்துக்கள்

பட்டம் பெறும் மாணவர்களுக்கான புகைப்படங்கள் யாவும் சிறந்த முறையில் புகைப்படம் பிடித்துத் தருபவர்கள்.

**குழந்தைகள் புகைப்படக்கலையகம்**

பல்கலைக்கழகச்சந்தி, பலாலிவீதி,
திருநெல்வேலி.

பட்டம் பெறும் உங்களுக்காக இரண்டு காட்சி அறைகள் விசேடமாக அமைக்கப்பட்டுள்ளன.
கொழும்பு பல்கலைக்கழக உடுப்பு அங்கியும் எம்மிடம் உள்ளது.

★ கறுப்பு, வெள்ளை கலர் புகைப்படங்களுக்கும்
★ புகைப்படச் சுருள்களும் மற்றும்
★ மூலப்பொருள்களும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சகல புகைப்படச் சுருள்களும் குறைந்த செலவில் கூடிய விரைவில் எம்மால் பிரதியாக்கம் செய்து தரப்படும்.

**சில்ரன் போட்டோ**

பல்கலைக்கழகச்சந்தி, பலாலிவீதி,
திருநெல்வேலி.

(38541)



## பால் கொள்வனவு, விற்பனை செய்பவர்களுடனான விசேட கலந்துரையாடல்

காலம்: 16 – 09 – 1995 சனிக்கிழமை
காலை 10-00 மணி

இடம்: தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவன கேட்போர் கூடம்
250, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தனியாகவோ, நிறுவனமாகவோ ஒரு நாளைக்கு 20 லீற்றர் பாலுக்கு மேல் கொள்வனவு, விற்பனையில் ஈடுபடுவோர் கண்டிப்பாக இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(இ-8256)

# படையினரின் சடலங்களில் இதுவரை ஒன்றாவது கண்டுபிடிக்கப்படவில்லை

## சுழியோடிகளைப் பயன்படுத்தியும் பலன் இல்லை

கொழும்பு, செப். 15

நேற்று முன்தினம் சந்தானைக்குச் சமீபமாக ஆகாயத்தில் வெடித்துச் சிதறி ஆழ் கடலில் விழுந்த ரஷ்யத்தயாரிப்பு அன்ரனோவ் விமானத்தில் பயணம் செய்த படையினரில் ஒருவரது சடலமாவது இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை.

68 இராணுவத்தினர் 2 பொலிஸார், 5 விமானிகள் அடங்கிய 75பேர் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டது தெரிந்ததே.

சுமார் ஆயிரம் மீற்றர் ஆழமான கடலில் விமானம் விழுந்ததால் சடலங்கள் மீதான தேடுதல் ஒரிரு தினங்கள் செல்லலாம் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விமானம் வெடித்துச் சிதறி விழுந்த இடத்தில் சமுத்திர நீரோட்டம் கடுமையாக இருப்பதால் சுழியோடிகளைப் பயன்படுத்தியும் போதிய பலன் கிட்டவில்லை என்றும்—

மோசமான கால நிலை காரணமாக விமானத்தின் இயந்திரம் பாதிக்கப்பட்டு விபத்து நிகழ்ந்திருக்கலாம் என்றும்— பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று தெரிவித்தார்.

கடந்த ஏப்பிரல் மாதம் மீண்டும் சண்டை தொடங்கிய பின்னர் படையினருக்கு ஏற்பட்ட பெரிய இழப்பு இதுவென செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன. (இ)

# பரிசோதனைக்கு உட்படுத்திய பின்பே விமானத்தில் சிகரெட் ஏற்றப்பட்டது

## அனுருத்த ரத்வத்த கூறுகிறார்

கொழும்பு, செப். 15

ஒரு குறிப்பிட்ட நபர் சிகரெட் காட்டுன்களை பாதுகாப்புப் பரிசோதனைக்கு உட்படுத்தாமல் விமானத்தில் ஏற்றியதாக வெளிவந்த செய்தியை பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மறுத்துள்ளார்.

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்பே விமானத்தில் சிகரெட் காட்டுன்கள் ஏற்றப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பொலிஸ் நலன்புரிப் பிரிவு யுத்தமுனையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு மாதம் ஒரு தடவை சிகரெட்டுக்களை அனுப்புவது வழக்கம்.

சிகரெட் காட்டுன்கள் கடும் பாதுகாப்புப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே நேற்று முன்தினம் காலை விமானத்தில் ஏற்றப்பட்டன.

இந்த சிகரெட் காட்டுன்களை வாங்கிய பொலிஸ் அதிகாரிகள் பற்றியும் அது கொள்வனவு செய்யப்பட்ட இடம் பற்றியும் முழுமையாக விசாரணை செய்யப்படுகிறது. இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

இவ்வாறு மேலும் அவர் தெரிவித்தார். (இ-எ)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம் செப். 15

வலிகாமம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது, அச்செழுவில் உயிரிழந்து, அடையாளம் காணப்படாதிருந்த பெண் ஒருவரின் சடலம் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது.

புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த ஞானச்செல்வம் மனோகரி (வயது 40) என்பவரே இவ்வாறு மரணமானவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-15)

## மேஜர் மோகன் - கப்டன் ராம்குமார்:

# வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல்

யாழ்ப்பாணம் செப். 15

இம் மாதம் 10 ஆம் திகதி சங்கிசேசன் துறைத் துறைமுகத்தினுள் ஸ்ரீலங்கா கடற்படைக்குச் சொந்தமான கப்பல் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த கடற்புலி மேஜர் மோகன், தலையகீர்கம் சுதாநேசன் (சொ மு - ஆளியவளை த மு - தளிப்பனை, முகாம் செம்பியன் பற்று)

கப்டன் ராம்குமார், தங்கராசா தங்கேஸ்வரன், அம்பன், குடத்தனை ஆகிய மாவீரர்களின் திருவுருவப் படங்கள் இன்று வெள்ளிக்கிழமை அவரவர் இல்லங்களில் இருந்து மு. ப. 12-00 மணியளவில் அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்படும்.

பி. ப. 4-00 மணியளவில் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அமைக்கப்பட்டுள்ள விசேட மேடைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு இறுதி வீர வணக்கக் கூட்டம் இடம்பெறும்.

பருத்தித்துறை வட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் வீரவணக்கக்கூட்டம் நடைபெறும்.

கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இலம்பரசன், செல்வி சுகுனா, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோர் வீரவணக்க உரை நிகழ்த்துவார்கள்.

இதனைத் தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வழமை போல் துயிலும் இல்ல மேடைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வைக்கப்பட்டு திருவுருவப் படங்களின் முன்னால் விடுதலைப் புலிகளின் உறுதிமொழி வாசிக்கப்பட்டு மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்படும்.

பின்னர் திருவுருவப் படங்கள் நினைவுக்கல் முன்னால் வைக்கப்பட்டு பெற்றோர் சுடரேற்றி மாலை அணிவித்து நினைவுக்கல் நடும் நிகழ்வு நடைபெறும். (இ)

# றோட்டறி ஆதரவில் போலியோ தடுப்பு தினம்

யாழ்ப்பாணம், செப். 15

போலியோவை 2,000 ஆண்டில் ஒழிக்கும் சர்வதேச றோட்டறியின் திட்டத்தின் கீழ் —

எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதியும், டிசம்பர் 9ஆம் திகதியும் இலங்கை முழுவதிலும் போலியோ தடுப்பு தேசிய தினம் நடைபெறவுள்ளது.

இத்தினத்தில் மொத்தம் 10,000 தடுப்பு நிலையங்களினூடாக ஐந்து வயதுக்கு குறைந்த குழந்தைகளுக்கு வாய் மூல தடுப்பு மருந்து வழங்கப்படும். நான்கு முதல் ஆறு வார இடைவெளியில் இரண்டு கூடுதல் 'டோஸ்' வாய்மூல தடுப்பு மருந்து வழங்கப்படும். ஏற்கனவே தடுப்பு மருந்து பெற்ற குழந்தைகளுக்கும் வாய் மூல 'டோஸ்' கொடுக்கப்படும்.

சுகாதார அமைச்சு, யுனிசெவ், உலக சுகாதார நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் போலியோ தடுப்பு தேசிய தினம் நடத்தப்படவுள்ளது.

இலங்கை முழுவதிலும் உள்ள ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து வழங்கும் திட்டத்துக்கு 20 லட்சம் டொலர்கள் (சுமார் 10கோடி ரூபா) செலவாகும்

இதில் 7,50,000 டொலர்களை றோட்டறிக் கழகமும், யுனிசெவ் 5,00,000 டொலர்களையும், உலக சுகாதார நிறுவனம் 2,50,000 டொலர்களையும் வழங்குகின்றன. (ஆ-க)


## அறிவித்தல்

நல்லூர் வணிகர் கழகம்

லெப். கேணல் தியாகி திலீபனின் 8-ம் ஆண்டு நினைவு நாள்

15 - 09 - 95 வெள்ளிக்கிழமை அதாவது இன்று ஆரம்பமாகும் தியாகி திலீபனின் நினைவு நாளை மக்கள் எழுச்சி மூலம் நினைவு கூர வேண்டும். ஆகவே நல்லூர் வணிகர்கழகத்திற்குட்பட்ட அனைத்து வணிகர்களும் தங்கள் வணிகநிலையங்களை பூட்டி ஊழியர் சகிதம் நல்லூர் ஆலய வீதியில் அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

-நல்லூர் வணிகர் கழகம்.

(சி/2261)



## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)

411/1, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

O/L கணிதம்

SPECIAL BATCH

By

திரு. B. P. பாஸ்கரன்

பிரிவு 2 திங் - வெள்ளி பி. ப. 5-15 — 6-15

பிரிவு 3 சனிக்கிழமை மு. ப. 9-00— 12-00

★ பிரிவு 3இற்கு பாடசாலை செல்லாத மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் (Day Class)

ஆரம்பம்: 15 - 09 - 1995

வெள்ளி பி. ப. 5-15

(சி-2257)


## புலிகளின் குரல் வானொலியில்

வெள்ளி இரவு

15 — 09 — 1995

- ★ 8-02 — தியாகி திலீபனின் 8ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — நல்லூர் ஈழதாசன் குழுவினர் தயாரித்து வழங்கும் 'தியாகதீபம்' வில்லிசையின் 1ஆம் பகுதி
- ★ 8-25 — கலைப்பொழுது —சி. கண்ணம்மா எழுதிய ''வீரவேங்கை மன்னன்''
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — அரசியல் அரங்கம்—ஜே. பாலகுமாரன் எழுதிய ''நுனிக்கொம்பில் ஏறினாக...''
- ★ 8-50 — ஏர்முனை— நிகழ்ச்சியில் ''பயிர்ச் செய்கையில் நீரின் முகாமை'' சென்னி— பதில்

16 — 09 — 1995

சனி காலை

- ★ 7-02 —மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

வெள்ளி மாலை

- ★ 5-01—சிந்தனைச்சிதறல்
- ★ 5-03 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — தியாகதீபம்
- ★ 5-30 — மண்ணின்குரல்
- ★ 5-40 — நேயர் கடிதங்கள்
- ★ 5-45 — நாடகம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — வெற்றிச் சுவடுகள்
- ★ 6-15 — [illegible] செய்திகள்
- ★ 6-20 — எதிரொலி

# இடம் பெயர்ந்தோர் தங்க புதிதாக இரு முகாம்கள்

## கோப்பாய் செயலர் பிரிவில் அமைப்பு

யாழ்ப்பாணம் செப் 15

மல்லாகம் மற்றும் புன்னாலைக் கட்டுவன் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த மக்கள் தங்குவதற்கென கோப்பாய் பிரதேச செயலர் பகுதியில் புதிதாக இரண்டு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உரும்பிராய் சந்திரோதயா வித்தியாசாலையில் 90 குடும்பங்களும், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் 110 குடும்பங்களும் தங்க வைக்கப்பட்டுள்ளன இக் குடும்பங்களை பராமரிக்கும் பணியை தமிழர் புனர் வாழ்வுக் கழகம் மேற் கொண்டுள்ளது. (எ-4)


## நாதன் மற்ஸ் அக்கடமி

பொற்பதி வீதி, கொக்குவில்.

ஆண்டு 6முதல் O/Lவரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும்

ஆரம்பம்: 16 - 09 - 1995

சனி மாலை 3.00 மணி

| | |
|---|---|
| கணிதம் — | திரு. V. N. பத்மநாதன் |
| விஞ்ஞானம் — | திரு. P. தயாநிதி |
| தமிழ் — | திரு. காரை எஸ். கெங்கா |
| — | திரு. கண்ணன் |
| சமூகக்கல்வி — | திரு. இரா கணேஷ் |
| | திரு. G. உதயரூபன் |
| ஆங்கிலம் — | திரு. வை. விஜயபாஸ்கரன் |
| வர்த்தகம் — | திரு. K. சிவஞானம் |
| சமயம் — | திரு. ஸ்ரீ |
| | திரு. கண்ணன் |

O/L வகுப்பிற்கு பிரத்தியேக கணித வகுப்பும் நடைபெறும்

O/L DAY CLASS

(பகல் நேர வகுப்புகள்)

ஆரம்பம் 16 - 09 - 1995

சனி காலை 8.00 மணி

(38540)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

பக்கம் - 4

### விற்பனைக்கு

மருந்தகம் [Pharmacy] நடத்துவதற்கு ஏற்ற தேக்கிலான, தரமான முழுமையான தளபாடங்கள் உடனடி விற்பனைக்குண்டு. பரணி மருந்தகம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு 17-9-1995 காலை 9 மணி முதல் 11 மணிவரை பார்வையிடலாம்; பரணி மருந்துச்சாலை, 456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(8737)

பாவனையில் உள்ள ஹொண்டா CD 185 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக்கிழமை மட்டும் வரவும். டாக்டர் வசந்தமாலா, 5ஆம் கட்டை, மானிப்பாய் வீதி, கோப்பாய்.
(38529)

### G. C E. A/L

புதிய பாடத்திட்டத்திற்குரிய செய்யுட் கோவை (சங்க காலம் தொடக்கம் இக்காலம் வரை) விரிவான பொருளோடு விளக்கக் குறிப்பும் கொண்டது. சிறி சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(38518)

### புலமைப் பரிசில்

வெற்றிக்கனி இதழ் — 4 வெளிவந்துவிட்டது. மாதிரி வினாக்கள் ஆண்டு — 4 ஆக்கம்: பொன் சக்திவேல் இவை இரண்டும் Bright இன் வெளியீடுகள்! புலமைப்பரிசில் ஆண்டு — 5 1995ஆம் ஆண்டு முதல் அமுலுக்குவரும் புதிய பாடத்திட்டத்தை தழுவியது. ஆக்கம்: தம்பிஐயா தேவதாஸ். விற்பனை பூபாலசிங்கம் புத்தக நிலையம். யாழ்ப்பாணம்.
[சி-2234]

### மணமகன் தேவை

வயது 35, பல்கலைக்கழக விரிவுரையாளரான (நிரந்தர பதவி) பண்புள்ள அழகிய, உயர் குடும்ப, சாதகக் குற்ற மற்ற பெண்ணுக்குத் தகுந்த வரன் தேவை. கடித மூலம் தொடர்பு: இல. 845, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
(38533)

## ROYAL INSTITUTE

(மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக, மானிப்பாய்)

**SPOKEN ENGLISH**

By:
**Mr. BRITTO**

**புதிய பிரிவு**

ஆரம்பம்:
16 – 09 – 1995
சனி 5-00 p. m.
(38530)

## PASCAL

**COMPUTER**
**வகுப்புகள்**

இன்று மாலை
4 30 மணிக்கு
ஆரம்பமாகின்றன.

- பதிவாளர்.
பரி. யோவான் ஆலயம்
சுண்டிக்குளி.
[சி/2264]

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## இசைக்கலைமணி/ நாட்டியக் கலைமணி/ பண்ணிசைமணி அனுமதிகள் 1994/95

மேற்படி அனுமதிக்கான நேர்முக/செய்முறைப் பரீட்சைகள் நவம்பர் மாத நடுப்பகுதியில் நடைபெறும். விண்ணப்பிக்கத் தவறியோர் ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக நேரடியாக விண்ணப்பங்களை பரீட்சைக் கிளையில் பெற்று சமர்ப்பிக்கவும். இவ் அனுமதி வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சையில் 4 ஆம் தரத்தில் சித்தி பெற்றிருப்பதுடன் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் குறைந்தது 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். முன்பு வட இலங்கை சங்கீத சபையின் 3 ஆம் தர பெறுபேற்றுடன் விண்ணப்பித்தவர்கள் தமது 4ஆம் தர பெறுபேற்றுடன் பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் வந்து சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நேர்முக பரீட்சைக்கான திகதி பத்திரிகையில் அறிவிக்கப்படும்.

- பதிவாளர்
[சி-2251]

யாழ். பல்கலைக்கழக
## பட்டமளிப்பு விழா - 1995

மேற்படி பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியை நிறைவு செய்து பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்று பட்டதாரிகளாக வெளியேறி நாட்டுக்கு சேவையாற்ற உள்ள அனைத்துப் பட்டதாரிகளுக்கும் எமது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவிக்கின்றோம்.

### "ஞானம்ஸ் படப்பிடிப்பாளர்"

உங்களை வரவேற்கிறது

முக்கிய குறிப்பு:
17 — 09 — 1995 ஞாயிறும் பிற்பகல் 2 மணி வரை உங்கள் வசதிகருதி திறக்கப்பட்டு இருக்கும்.

ஞானம்ஸ் படப்பிடிப்பாளர்.
301, லெப். இளங்கோ தெரு,
(மணிக்கூட்டு வீதி)
யாழ்ப்பாணம்.

[சி-2227]

யாழ் வணிகர் கழகம்
## தியாகி திலீபனின் 8 ஆம் ஆண்டு உண்ணா நோன்பு நினைவு நாள்

தியாகி திலீபனின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி எமது கழகத்திற்கு உட்பட்ட சகல வணிக நிலைய உரிமையாளர்களும், ஊழியர்களும் 16-09-95 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் நடைபெறவிருக்கும் உண்ணா நோன்பில் கலந்து கொள்ளும் முகமாக அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு எமது கழகப் பணிமனையில் ஒன்று கூடுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அன்றைய தினம் சகல யாழ். நகர் எல்லைக்குட்பட்ட வணிக நிலையங்களும் முழுமையாக மூடப்பட்டிருக்கும் என்பதையும் இத்தால் அறியத் தருகின்றோம்.

— யாழ். வணிகர் கழகம்

(சி-2255)

## ★ புதுக்கடைத் திறப்பு விழா ★

யேசுவின் துணை கொண்டு
இன்று **15-09-1995** வெள்ளிக்கிழமை
காலை 8-30 மணியளவில்
யாழ்ப்பாணம் சந்தோசம் தெரு
(கஸ்தூரியார் வீதி)
111C, இலக்க கட்டடத்தில் அமைந்துள்ள

## ★ மேசியா நகைமாடம் ★

புதிதாக ஆரம்பித்து வைக்கப்படும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அருணா
உரிமையாளர்

(38537)

## நீங்காத நினைவில் ஆறாம் மாதம்



அரும்பு: 07 — 12 — 1948
உதிர்வு: 15 — 03 — 1995

### திருமதி அமலசீலி கர்வாலோ

மாதங்களும் ஆறு கடந்தனவோ
மகளே நீ இறந்த தென்ற
செய்தி பொய்யாகாமல்
தடுமாறினவே எங்கள் நெஞ்சம்!
நம்ப முடியவில்லை இருந்தும்
உண்மையானதே!
உலகமே இருண்ட போதும்
என்றும் எங்களுக்கு
உன்முகம் தானம்மா தெரிகிறது!
பொட்டிட்ட உனது நெற்றியையும்
புன்னகை தவழும் இன்முகத்தையும்
காணாமல் கலங்குகின்றோம்!
ஆறாவது மாதம் வந்தும்
ஆறவில்லை எம்துயரம் - உமது
ஆத்மா சாந்தியுற அனுதினமும்
ஆண்டவரிடம் பிரார்த்திக்கின்றோம்!

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு பெற்றோர், சகோதரிகள், சகோதரன்,
கணவன், பிள்ளைகள், மைத்துனர்மார்
மைத்துனி, பெறாமக்கள், மருமக்கள்.

57, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2258)

# பொருளியற் கல்லூரி

110/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
(மக்கள் வங்கிக்கு அருகில்)

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் 1995 - மீட்டல் வகுப்பு

பொருளியல்
**S. வரதராஜன்**
B. A. (Hons)

| G. A. Q.: Ist in COM | B. A, B. COM PART I |
|---|---|
| பிரிவு I திங்கள், வியாழன் 6 - 30 — 7 - 30 a.m | பிரிவு I புதன், வெள்ளி 6 - 30 — 7 - 30 a. m. |
| பிரிவு II சனி, ஞாயிறு 2 - 00 — 3 - 00 p.m. | பிரிவு II சனி, ஞாயிறு 3 - 00 — 4 - 00 p m |
| **B. A. PART II** | **B, COM PART II** |
| சனி, ஞாயிறு 1 - 00 — 2 - 00; புதன் 4 - 00 — 6 - 00 | புதன் 4 - 00 — 6 - 00 p.m. |

ஆரம்பம்: இன்று 15-09-1995
வெள்ளி 6-30 a.m

[சி/2241]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானம் 16முறை வந்து சென்றதாம்

நேற்று முன்தினம் வெடித்துச் சிதறிய ''அவ்ரோவ்'' விமானம் அதற்கு முதல் நாள் இரத்மலானையிலிருந்து பலாலிக்கு 16 தடவைகள் பறந்து சென்று வந்ததாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜேனல் அனுருத்த ரத்வத்த செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீலங்காவில் இந்த விமானம் வெள்ளோட்டம் சென்றபோதே விபத்துக்கு உள்ளானதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ-3)

## குண்டு வெடிப்பினாலேயே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹரி குணதிலக மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விமான விபத்தை ஏற்படுத்தக் கூடிய மோசமான கால நிலைநிலவியதாக சம்பந்தப்பட்ட விமானத்தை ஓட்டிய விமானி தெரிவித்திருக்கவில்லை என்பதையும் ஹரி குணதிலக சுட்டிக்காட்டினார்.

இத்தகைய விமானங்கள் திருப்புகளைக் கொண்டு செல்ல உலகம் எங்கும் பயன்படுத்த பட்டு வருகின்றன. இலங்கை விமானப்படை தற்போது கூறும் குறைபாடு அல்லது பிரச்சினையை இத்தகைய விமானங்கள் எதுவும் முன்னர் சந்திக்கவில்லை — என்றார் அவர்.

''எனவே தொழில்நுட்பக் கோளாறு மற்றும் காலநிலை சீரின்மை என்ற காரணங்களை நான் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை''

''இந்த வகை விமானங்களில் முப்படையினரும் பயணம் செய்வது வழக்கம். எனவே இவ் விபத்துக்கான காரணத்தை அறிந்துகொள்ள முப்படையினரும் பேரார்வம் உடையவர்களாக இருப்பர். ஆகவே இச் சம்பவம் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்துவது அரசின் கடமையாகும்'' — இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஏயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தீவிர ஆதரவாளராகவும் உறுப்பினராகவும் இருந்தவர் என்பதும் —

கடந்த ஏப்ரல் கடைசி வாரத்தில் பலாலிக்கு அண்மையில் விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட படையினரின் இரு அவ்ரோ விமானங்களில் ஒன்றை அவரின் மகனே செலுத்தி வந்தார் என்பதும் —

அந்தச் சம்பவத்தில் தமது மகன் பலியான பின்னரும் ஸ்ரீல. சு. க. அரசை ஆதரித்து வந்த அவர் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜேனல் அனுருத்த ரத்வத்தையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அண்மையில் கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். [உ-3 6]

## விமானி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாக்கியநாதன் வடமராட்சி ''லிபரேஷன் ஒப்பரேஷன்'' நடவடிக்கையின்போது திறமையாகச் செயலாற்றி, ''ரணவிக்கிரம'' என்ற விருதைப் பெற்றவர் என்றும் —

அரச தலைவர்கள் பலரை இவர் விமானத்தில் ஏற்றிச் சென்றவர் என்றும் —

அனுபவமும் ஆற்றலும் மிக்க விமானி என்றும் செய்திகள் கூறுகின்றன.

மேலும் இவர் அத்தகைய தவறான நோக்குடன் செயற்பட்டிருப்பின் மிக இலகுவாக அலரி மாளிகையின் மீதோ, நாடாளுமன்றக் கட்டடம் மீதோ விமானத்தை இறக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்றும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. [ஒ-6]

## தியாகி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் யாழ் மாவட்டத்தில் இன்று தியாகி திலீபன் இந்திய வல்லாதிக்கத்திற்கெதிராக ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்ரெம்பர் பதினைந்தாம் திகதியிலிருந்து உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த நேரமாகிய முற்பகல் 9-55 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

வலிகாமக் கோட்டத்தில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வீதியிலும், தென்மராட்சிக் கோட்டத்தில் நுணாவில் மேற்கு மணற்குணாய்ப் பிள்ளையார் கோயில் முன்றிலிலும், வடமராட்சிக் கோட்டத்தில் கரணவாய் மத்தி மூத்தவிநாயகர் கோயில் முன்றிலிலும் அடையாள உண்ணாவிரதங்கள் நடைபெறவுள்ளன.

அடையாள உண்ணாவிரதங்கள் தொடர்ந்து பன்னிரு நாள்கள் — தியாகி திலீபன் தியாகச் சாவைத் தழுவிக்கொண்ட செப்டெம்பர் 26 ஆம் திகதி வரை — நடைபெறும்.

தியாகி லெப். கேணல் திலீபன் 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் 26 ஆம் திகதி முற்பகல் 10 48 மணியளவில் தியாகச்சாவைத் தழுவிக்கொண்டமை தமிழீழ மக்கள் யாவரும் அறிந்ததே.

வடமராட்சி கிழக்கில் கடற்புலிகளின் ஏற்பாட்டில் நாகர் கோவிலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் இன்று முதல் 26 ஆம் திகதி வரை உண்ணாவிரதம் நினைவுச் சொற்பொழிவுகள் நடைபெறும்.''

வடமராட்சியில்

''தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகள் இன்று (வெள்ளி) முதல் ஆரம்பமாவதையடுத்து வடமராட்சிப் பகுதி விழாக்கோலம் பூண்டுள்ளது.''

ஆங்காங்கே சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு, வீதி ஓரங்கள் சனசமூக நிலையங்கள் தோறும் சிறுசிறு குடில்கள் அமைக்கப்பட்டு திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிக் கோட்டத்துக்கான திலீபனின் நினைவு தின பொதுப்பந்தல் கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடியில் அமைக்கப்பட்டுள்ளது. இதேவேளை திலீபனின் நினைவையொட்டி வடமராட்சிப் பகுதியில் இன்று தொடக்க [illegible] களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. [ஆ-173]

## இரு போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப் 15

நேற்று முன்தினம் புன்னாலைக்கட்டுவனில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது விழுப்புண் அடைந்திருந்த இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

லெப்டினன்ட் தயாளன் அல்லது சுருளி [சுப்பிரமணியம் சாந்தகுமார் — சித்தன்கேணி], வீரவேங்கை சாந்தி (இராஜையா சுபாஸ்கரன் — உரும்பராய்) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தனர்.

இந்த மாவீரர்களின் வித்துடல்கள் இன்று பி. ப. 3 மணிக்கு அவரவர் இல்லங்களில் இருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு மாலை 4 மணியளவில் மக்கள் இறுதி வணக்கத்திற்காக உரும்பராய் ஞானவைரவர் சனசமூக நிலையத்தில் வைக்கப்படும்.

இறுதி வணக்கக் கூட்டம் நிறைவுற அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் இரு மாவீரர்களது வித்துடல்களும் புனித விதைகுழியில் விதைக்கப்படும். [ஒ-3]

## மணலைதீவு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேல் ஷெல் விழுந்ததில் வீடு பலத்த சேதமடைந்தது.

றொபின்சன் கிறிஸ்டி வேணீற்றா (வயது 18) உயர் வகுப்பு மாணவியே இச் சம்பவத்தில் காயமடைந்தவர் ஆவார். இவர் திருக்குடும்ப கன்னியர்மட ஆங்கிலப் பாடசாலையில் கல்வி பயில்கிறார். (ஒ-15)

---

# முதலாவது பிறந்த நாள் நினைவலைகள்

பக்கம் -6



## செல்வி பானுஜா நாகேந்திரராஜா

| | |
|---|---|
| தாயின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
| **15 - 09 - 1994** | **27 - 05 - 1995** |

எங்கள் அன்புச் செல்வத்தின் பிரிவால் வாடும்;

அப்பா அம்மா, பேரர், பேர்த்திமார், மாமன்மார், மாமிமார், மருமக்கள், பெரியப்பாமார், பெரியம்மாமார், அன்ரி, சித்தப்பாமார்.

அம்மன் றோட்,
திருநெல்வேலி.

(38536)

---

# மரண அறிவித்தல்கள்

## வீரவாகு அருளானந்தம்

மல்லாகத்தைச் சேர்ந்த வீரவாகு அருளானந்தம் 12 - 09 - 1995 அகாலமரணமானார்.

இவர் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், அருள்வாணி, அருள்ராஜ் விக்னராஜ், கோபிகா ஆகியோரின் அன்புத்தந்தையாரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் 13 - 09 - 1995 அன்று தகனம்செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. யோகேஸ்வரி
(மனைவி)

தற்போதைய முகவரி;-
ஐ. கனகலிங்கம்,
687/7, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

(38542)

## பொன்னையா கனகசபை

(ராசப்பா)

(இளைப்பாறிய புகையிரத மேற்பார்வையாளர்)

யாழ்ப்பாணம், வண். வட - மேற்கு கேசாவில் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த பொன்னையா கனகசபை (14 - 09 - 95) வியாழக்கிழமை காலமானார்.

இவர் ஞானாம்பிகையின் (ஞானம்) அன்புக் கணவரும், சிறிதரனின் (சவூதி அரேபியா) பாசமிகு தந்தையும், இராசதுரை, சோதிடர் மார்க்கண்டு பென்சனியர் காலஞ்சென்ற நடராஜா, காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயந்தி, வனஜா (ஆசிரியை கொக்குவில் இ. ம. வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும், கவசரட்ணத்தின் சிறிய தகப்பனும், அர்ச்சுனா, ஆரணி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (15 - 09 - 95) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிறிதரன்
(மகன்)

45, நாவலடி லேன்,
வண். வட - மேற்கு,
யாழ்ப்பாணம்.

(38543)

---

# இன்ரறக்ற் கழக அவசரக் கூட்டம்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட இன்ரறக்ற் கழக தலைவர்கள், செயலாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று (வெள்ளிக்கிழமை) 2. 30 மணிக்கு நல்லூர் கோவில் வீதியிலுள்ள கம்பன்கழக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. முக்கியமான விடயம் கலந்துரையாட இருப்பதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Rtn. டாக்டர் கு. சிறீரட்ணகுமார்
இன்ரறக்ற் மாவட்ட
இணைப்பாளர்

(சி/2283)

---

# மரண அறிவித்தல்...

## Dr. கணபதிப்பிள்ளை பரஞ்சோதி

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட Dr. கணபதிப்பிள்ளை பரஞ்சோதி அவர்கள் கனடாவில் 13 - 09 - 1995 புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற Dr. கணபதிப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அம்பலவாணர் - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீகணேசன், ஸ்ரீஸ்கந்தராசா, மாலினிதேவி, கமலாசனி, சிவநாயகி, விக்கினேஸ்வரி, நாகேந்திரகுரியர், சிவசோதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செல்வதி, லீலாவதி, சோமசுந்தரம், சின்னத்தம்பி, சண்முகநாதன், அமிர்தலிங்கம், தேவராணி, இலக்குணராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் —

நடசிவராயம் (இளைப்பாறிய வகிலையர்), தவபாக்யம், காலஞ்சென்ற கனகபூஷணம், திலகவதி அம்மாள், கமலாவதி (இளைப்பாறிய ஆசிரியை), காலஞ்சென்ற மகாலிங்ககுரியர், நாகபூஷணி அம்மாள், சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, நவரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், சோமசுந்தரம் (இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்), K K நடராஜா (இளைப்பாறிய அதிபர்), கனகேஸ்வரி, பத்மநாதன், நாகேஸ்வரி, Dr தாமோதரம்பிள்ளை, தனபாக்கியம், பாக்கியலீலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. நமசிவாயம்
(சகோதரன்)

251, பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.

(38546)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/[illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15 - 09 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org